## சட்டத்திற்குப் புறம்பாக முதல்வர் விஜய் பேசி வருகிறார்!

## மதுராந்தகம் தொகுதியில் த.வெ.க.வினர் பணப்பட்டுவாடா!

# ஜெம் வீரமணியை காப்பாற்ற நான்கு முறை த.வெ.க. அரசு முயன்றுள்ளது!

## மாட்டிக்கொண்டதால் தி.மு.க. மீது மடைமாற்றம் என கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி. பேட்டி!

**சென்னை, செப்.28–**

**நீதிமன்ற உத்தரவை மதிக்காத விஜய் மீதும், த.வெ.க. சார்பில் பணப் பாட்டுவாடா செய்யப்படுவதன் மீதும் நடவடிக்கை எடுக்கக் கோரி தலைமைத் தேர்தல் அதிகாரியிடம் தி.மு.க. சார்பில் புகார் அளித்த பிறகு தி.மு.க.செய்தித் தொடர்பு செயலாளர் – மாநிலங்களவை உறுப்பினர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் (26.9.2026) செய்தியாளர்களை சந்தித்தார்.**

**அப்போது அவர் அளித்த பேட்டி வருமாறு:–**

நடைபெற இருக்கின்ற இடைத்தேர்தலில், ஆளும் விஜய் தலைமையிலான அரசின் அத்துமீறல்களையும், ஜனநாயக விரோதமான அதிகார துஷ்பிரயோகத்தையும் தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்கு கொண்டு வரும் பொருட்டு, இன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தலைமைத் தேர்தல் அதிகாரி அவர்களின் அலுவலகத்தில் மனு அளித்திருக்கிறோம்.

குறிப்பாக, ஜெம் கிரானைட் நிறுவனத்தின் அதிபர் சம்பந்தமான வழக்கில் ஏற்கனவே இது குறித்து பேசிய அமைச்சர்கள் ஆதவ் அர்ஜுன் மற்றும் நிர்மல் குமார் ஆகியோர் மீது, எங்களுடைய பொதுச்செயலாளர் அண்ணன் துரைமுருகன் அவர்கள் அவதூறு வழக்கைத் தொடர்ந்திருந்தார்.

அந்த வழக்கை விசாரித்த நீதியரசர் அவர்கள், இந்த வழக்கில் தி.மு.க.விற்கோ, தி.மு.க.வின் முன்னாள் அமைச்சர்களுக்கோ அல்லது நிர்வாகிகளுக்கோ சம்பந்தம் இருப்பதாக எந்த முகாந்திரமும் இல்லாத நிலையில், இதில் தி.மு.க.வை சம்பந்தப்படுத்திப் பேசக்கூடாது என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறார். அமைச்சர்களின் சார்பில் ஆஜரான வழக்கறிஞரிடமும் இதை நீதியரசர் அவர்கள் மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

### தேர்தல் ஆதாயத்திற்காக பொய்யான குற்றச்சாட்டு!

இதுபோன்ற உண்மைக்குப் புறம்பான அல்லது நிரூபிக்கப்படாத எந்த ஒரு புகாரையும் எடுத்துக்கொண்டு எந்த ஒரு கட்சியையும் விமர்சிக்கக் கூடாது என்றும், அதை தேர்தல் ஆதாயத்திற்காகப் பயன்படுத்தக் கூடாது என்றும் நீதிமன்றம் அறிவுறுத்தியிருக்கிறது.

ஆனால், அதற்கு நேர்மாறாக, முதல்வர் விஜய் அவர்களே தன்னுடைய பரப்புரைக் கூட்டத்தில் இது குறித்து தேவையில்லாத அவதூறுகளைப் பேசியிருக்கிறார். உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பையும் மதிக்காமல், அதைவிட மிக முக்கியமாக, தேர்தல் ஆணையம் வழங்கியுள்ள மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் மற்றும் தேர்தல் தொடர்பான வழிகாட்டுதல் நெறிமுறைகளில், இரண்டாவது பிரிவில் மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு மாறாகவும் அவர் செயல்பட்டிருக்கிறார்.

எந்த ஒரு கட்சித் தலைவரும், இன்னொரு கட்சியைச் சார்ந்து கூறப்படும் ஊர்ஜிதம் செய்யப்படாத அல்லது முகாந்திரம் இல்லாத எந்த ஒரு குற்றச்சாட்டையும் பேசக்கூடாது என்று தேர்தல் ஆணையமும் தெளிவாகக் கூறியிருக்கிறது.

### முதல்வர் விஜய்யின் ஜனநாயக விரோத நடவடிக்கை!

எனவே, தேர்தல் ஆணையத்தையும் நாங்கள் மதிக்க மாட்டோம்; உயர் நீதிமன்றத்தையும் நாங்கள் மதிக்க மாட்டோம் என்ற வகையில், சட்டத்திற்கு புறம்பாக முதலமைச்சரே நடந்து கொள்வது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது; ஜனநாயக விரோதமானது.

எனவே, இது குறித்து தலைமைத் தேர்தல் அதிகாரி அவர்களைச் சந்தித்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் புகார் கடிதம் கொடுத்திருக்கிறோம். உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறோம்.

ஏற்கனவே மதுராந்தகம் தொகுதியில் வாக்காளர்களுக்கு பணம் பட்டுவாடா செய்தது தொடர்பான வீடியோ காட்சிகளுடன், அங்குள்ள தேர்தல் நடத்தும் அலுவலரிடமும் புகார் கடிதம் கொடுத்திருக்கிறோம்.

இரண்டாவதாக, அரசு வாகனங்களை அவருடைய தேர்தல் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்துவதைத் தெளிவாக வீடியோ பதிவு செய்து, அதையும் அங்குள்ள தேர்தல் அதிகாரியிடம் கொடுத்திருக்கிறோம். அரசு வாகனங்களை எந்தக் காரணத்தை முன்னிட்டும் தேர்தல் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தக்கூடாது. அது அதிகார துஷ்பிரயோகம். எனவே, சம்பந்தப்பட்ட வேட்பாளர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் புகார் கொடுத்திருக்கிறோம்.

### மாணவர்களை பிரச்சாரத்தில் ஈடுபடுத்தும் விஜய்!

அதற்கு அடுத்து, நம் எல்லோருக்கும் தெரிந்ததும், அறிவுறுத்தப்பட்டதுமான ஒரு விஷயம் இருக்கிறது. சமூக அக்கறை கொண்ட அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விஷயம் என்னவென்றால், குழந்தைகளை, குறிப்பாகப் பள்ளி மாணவர்களை, தேர்தல் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தக் கூடாது என்பதுதான்.



அது சட்டமாக இல்லாவிட்டால்கூட, அறிவுடையோர், பகுத்தறிவுடையோர் மாணவர்களை இதுபோன்ற அரசியல் ஆதாயத்திற்குப் பயன்படுத்த மாட்டார்கள். ஆனால், மாணவர்களின் கைகளில் அந்தக் கட்சியின் கொடியைக் கொடுத்து, அந்தக் கட்சிக்கு தேர்தல் பிரச்சாரம் செய்யும் வகையில் மாணவர்களை அழைத்துச் சென்றதையும் வீடியோ பதிவு செய்து, அந்த அதிகாரியிடம் கொடுத்திருக்கிறோம்.

ஆக, தேர்தல் ஆணையமோ, சட்டமோ, நீதிமன்றமோ கூறுகின்ற எதையும் பொருட்படுத்தாமல், ஒரு எதேச்சதிகாரப் போக்கோடு நடந்துகொள்கிற த.வெ.க அரசின் இந்த அலட்சியப் போக்கை உடனடியாகத் தடுத்து நிறுத்தினால்தான், தேர்தல் ஆணையம் நியாயமானதும் நேர்மையானதுமான தேர்தலை நடத்துகிறது என்பதை நிரூபிக்க முடியும்.

எனவே, தேர்தல் ஆணையம் உடனடியாக நடவடிக்கை எடுத்து இது போன்ற அத்துமீறல்களைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று தலைமைத் தேர்தல் அதிகாரியிடமும், மாவட்டத் தேர்தல் அதிகாரியிடமும் நாங்கள் புகார் அளித்திருக்கிறோம். அவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பார்கள் என்று நாங்கள் நம்புகிறோம் என அவர் பேட்டியளித்தார்.

மேலும் செய்தியாளர் கேள்விக்கு அளித்த பதில்கள் வருமாறு:-

நான் பிரச்சாரத்திற்குச் செல்லும்போது என் பிள்ளையும் கூட வருவது என்பது வேறு. பள்ளிக்கூடத்திற்கே சென்று பிள்ளைகளைப் பிடித்து வந்து, அவர்களைப் பயன்படுத்துவது என்பது வேறு. அப்படி இதுவரை நடந்ததாக வரலாறு இல்லை. திராவிட முன்னேற்றக் கழகம் ஒருபோதும் அதைச் செய்ததில்லை.

ஆனால், அந்தக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் அல்லது நிர்வாகிகள் பிரச்சாரத்திற்குச் செல்லும்போது, அவர்களுடைய வீட்டுப் பிள்ளைகள் உடன் சென்றால் அது தவறில்லை என்று கூறப்பட்டுள்ளது. அவர்களை அழைத்துக்கொண்டு செல்வது வேறு; பள்ளி மாணவர்கள் அல்லது கல்லூரி மாணவர்களை கட்டாயப்படுத்தி அழைத்துச் சென்று தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுத்துவது என்பது வேறு.

### நீதிமன்றத்தை மதிக்காத த.வெ.க. அரசு!

அதைச் செய்யக்கூடாது என்பதைத்தான் தேர்தல் ஆணையமும் நீதிமன்றமும் உறுதி செய்திருக்கின்றன. அதை இந்த அரசு கண்டுகொள்ளாமல் மீண்டும் அதையே செய்கிறது என்பதனால்தான் நாங்கள் அதைத் தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்கு எடுத்துச் சென்றிருக்கிறோம்.

ஜெம் வீரமணி வழக்கு தொடர்பான கேள்வி....

2025-ஆம் ஆண்டு அக்டோபர் 5-ஆம் தேதி புகார் கொடுக்கப்படுகிறது. 26 எஃ.ப்.ஐ.ஆர்.கள் போக்சோ வழக்கில், உங்களுக்குத் தெரியும், ஏனைய வழக்குகளைப் போல் எடுத்தேன், கவிழ்த்தேன் என்று விசாரணையை முடித்துவிட முடியாது. மிகத் தெளிவாக பாதிக்கப்பட்டவர்களையும், அந்தப் பாதிப்புக்கு உள்ளாக்கியவர்களையும் அறிந்த பிறகுதான் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய முடியும்.

அப்படிப் பார்க்கும்போது, அக்டோபரில் புகார் கொடுக்கப்பட்டு, நவம்பர், டிசம்பர், ஜனவரி ஆகிய மூன்று மாதங்களுக்குப் பிறகு, பிப்ரவரி மாதத்தில் நாங்கள் நடவடிக்கை எடுத்தோம்.

நாம் எல்லோரும் அறிந்ததுதான். மார்ச், ஏப்ரல், மே ஆகிய மூன்று மாதங்களும் அரசு காபந்து அரசாகத்தான் இருந்தது. அந்தக் காலகட்டத்தில் காவல்துறையின் ஒட்டுமொத்த நிர்வாகப் பொறுப்பும் ஆளுநரிடம் சென்றுவிடும்.

எனவே, பிப்ரவரி மாதம் நாங்கள் நடவடிக்கை எடுத்தோம். அதன் பிறகு எங்களுடைய அரசு இல்லை.

மீண்டும் சொல்கிறேன். நாம் சொன்னதை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளாவிட்டால்கூட, இந்த விவகாரத்தில் நியாயம் தேவை என்று கூறி, அரசு பொறுப்பேற்ற உடனேயே அவரைக் கைது செய்திருந்தால் அது நியாயமானதாக இருந்திருக்கும்.

### ஜெம் வீரமணியை காப்பாற்ற த.வெ.க. அரசு எடுத்த முயற்சிகள்!

ஆனால், என்னால் தேதி வாரியாகச் சொல்ல முடியும். ஜூன் மாதம் 6ஆம் தேதி, ஜூன் மாதம் 26ஆம் தேதி, அதன் பிறகு ஆகஸ்ட் மாதம் 8ஆம் தேதி மற்றும் 26ஆம் தேதி என, இந்த வழக்கை முடிப்பதற்கு இந்த அரசில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

“இந்த விசாரணையில் எங்களுக்கு எந்த முன்னேற்றமும் இல்லை. எனவே, ஜெம் வீரமணியின் மீதான வழக்கை நாங்கள் வாபஸ் பெறுகிறோம்;” என்ற நிலைப்பாட்டை எடுத்திருக்கிறார்கள்.

இந்த விசாரணையை முற்றிலுமாக முடிப்பதற்கு இந்த அரசு நான்கு முறை முயற்சித்திருக்கிறது. விஜய் தலைமையிலான அரசு நான்காவது முறையாக முயற்சித்தபோதுதான், மக்களுக்குப் புரிய வேண்டும் என்பதற்காக இதைச் சொல்கிறேன்.

நீதியரசர் அவர்கள் கோபப்பட்டு, “இதுபோன்ற அநியாயத்தை நாங்கள் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது. உடனடியாக வீரமணி அவர்களைக் கைது செய்ய வேண்டும்” என்று 27ஆம்தேதி ஆணையிட்ட பிறகுதான், 29ஆம் தேதி விஜய் அரசு கைது செய்தது.

### ஜெம் வீரமணியுடன் த.வெ.க. அமைச்சர்கள்!

விஜய் அரசினுடைய காவல்துறை நேரடியாக வீரமணியைக் கைது செய்யவில்லை; நீதியரசருடைய கட்டாயத்தின் பேரில்தான் கைது செய்தது என்று சொன்னால், அவர்கள் சொன்னார்களே, அமைச்சர்கள் எங்களுடைய குடும்ப நண்பர்கள் என்று. இந்த அமைச்சர்கள் எல்லாம் கூட இருந்து ஜெம் வீரமணியோடு கொஞ்சிக் குலாவியதைப் பார்த்திருக்கிறீர்கள். அப்போது அவர்கள் பேசியதெல்லாம் வீடியோக்களில் இருக்கிறது. நீங்களும் ஒளிபரப்பியிருக்கிறீர்கள்.

அப்படியானால், குடும்ப நண்பர்களைக் காப்பாற்றுவதற்கு நான்கு முறை முயற்சித்திருக்கிறார்கள் விஜய் தலைமையிலான காவல்துறையினர். ஆனால், நான்காவது முறையாக, நல்லவேளையாக நீதியரசர் அவர்கள் தெளிவாகப் பிடித்துவிட்டார்; உடனடியாக வீரமணியைக் கைது செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டார்.

எனவே, நீதிமன்றத்தின் ஆணையின் பேரில் கைது செய்யப்பட்டாரே ஒழிய, நீதி, நியாயத்திற்காக விஜய் அரசு அவரைக் கைது செய்யவில்லை.

எனவே, மூடி மறைக்க நினைத்த விஜய் அரசு மாட்டிக்கொண்ட காரணத்தினால், அதைத் திமுக மீது மடைமாற்றம் செய்ய நினைக்கிறது. மக்கள் முட்டாள்கள் அல்ல; அவர்களுக்கு உண்மை தெரியும்.

இவ்வாறு கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி. பேட்டியளித்தார்.



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வெற்றி வேட்பாளர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து தளவாய்பட்டினத்தில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் வீதி வீதியாக சென்று பொதுமக்களிடம் உதய சூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் கவிதை பித்தன், ஒன்றிய கழக செயலாளர்கள் சி.சண்முகம், ஆர்.ஆர்.சாமிநாதன் மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.எஸ்.கருப்பையா, மாநகர பொறுப்பாளர் வே.ராஜேஷ், மாவட்ட நிர்வாகிகள் சந்தோஷ், எட்வின், கலையரசன், எஸ்.வி.ஆர்ஸ்டாலின், சேதுராமன், அண்ணாதுரை உள்பட பலர் கலந்து கொண்டனர்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கழக வெற்றி வேட்பாளர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து மூலனூர் ஒன்றிய கழக அலுவலகத்தில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் மதுரை மேற்கு மாவட்ட கழக செயலாளர், முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். இதில் கே.ஆர்.என்.ராஜேஷ் குமார் எம்.பி., பார் இளங்கோவன், வெங்கடேஷ், தமிழரசன், மூலனூர் பேரூர் கழக செயலாளர், மக்கள் க.தண்டபாணி, சபரி எஸ்.முருகானந்தம் உள்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.